| | | | |
|---|---|---|---|
| 31.08.2021 | அசல் வழக்கு எண்.35/2018 | வா.சா.1 | திருமதி. அனுராதா<br>க/பெ.வேணுகோபால் |

சாட்சி மீண்டும் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை - (பிரதிவாதி தரப்பில்)

24 வாதிகளும் கிணறு வெட்டுவது மற்றும் பைப் லைன் போடுவது சம்பந்தமாகவும் யார் யார் என்ன செலவுகள் செய்வது என்று தனிப்பட்ட முறையில் ஒப்பந்தம் போட்டுள்ளோமா என்றால் எல்லோரும் சேர்ந்து போட்டுள்ளோம் . அந்த ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . அவ்வாறு நாங்கள் கிணறு வெட்டுவது சம்பந்தமாகவோ அல்லது பைப் லைன் போடுவது சம்பந்தமாகவோ எங்களுக்குள் எந்த ஒப்பந்தமும் போட்டுக்கொள்ளவில்லை என்றாலும் வழக்கிற்காக பின்யோசனையிட்டு அவ்வாறு ஒப்பந்தம் போட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரிய ல்ல . என் வாதுரையிலோ அல்லது என் பிரமாண வாக்குமூலத்திலோ எழுத்து மூலமாக வாதிகளுக்குள் ஒப்பந்தம் போட்டதாக சொல்லியிருக்கிறேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை . வா சா ஆ 1 ஒப்பந்தத்தில் கிணறு வெட்டுவதாகவோ பைப் லைன் போடுவதாகவோ எதுவும் சொல்லப்படவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை . நான் 6ம் வகுப்பு படித்திருக்கிறேன். தமிழ் எழுத படிக்க தெரியும். வா சா ஆ 1 ஒப்பந்தத்தில் பைப் லைன் போடுவதற்காகவும் கிணறு வெட்டுவதற்காகவும் ஒப்பந்தம் போடுகிறோம் என்று வாசகம் எதாவது சொல்லப்பட்டுள்ளதா என்றால், சரிதான். 24 வாதிகளும் விவசாயம் தான் செய்கிறார்கள் என்பதை காண்பிக்க வருவாய் துறை ஆவணங்கள் எதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறோமா என்றால் இல்லை . 24 வாதிகளுக்கும் விவசாய நிலங்கள் 4 கி லோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது . அந்த 4 கி. மீட்டர் விஸ்தீரணத்திற்குள் குழாய் பதிக்க வேண்டும் என்றால் அரசு மற்றும் புறம்போக்கு நிலங்களுக்குள் குழாய் பதிக்க வேண்டி வரும் என்றால் சரிய ல்ல. அவரவர் நிலத்திற்குள் தான் பதிக்க வேண்டியிருக்கும் . 24 வாதிகளின் நிலங்களுக்கு யார் யார் நிலத்தின் வழியாக குழாய் போகிறது என்பதை காண்பிப்பதற்கு நான் நீதிமன்றத்தில் ஆவணங்கள்

தாக்கல் செய்யவில்லை. கிணறு வெட்டுவதற்கும் சோலார் மின் மோட்டார் வைப்பதற்கும் பைப் லைன் செல்வதற்கும் ஆன செலவினங்களை காண்பிப்பதற்காக ரசீதுகள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . 1 ம் பிரதிவாதி நிலத்தில் பைப் லைன் பதிப்பதற்கு அவர் எழுத்து மூலமான ஆவணங்கள் கொடுத்ததாக நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் கொடுத்திருக்கிறார் . எங்களுக்கு எழுதி கொடுத்திருக்கிறார். ஆவண எண். 04 ஏபி212740 ல் மின் இணைப்பு மாற்றுவதற்காக 2, 3 பிரதிவாதிகள் 1 ம் பிரதிவாதியிடம் கையெழுத்து வாங்கி அதனை வைத்து மோசடியாக என்னுடைய முதல் குறுக்கு விசாரணைக்கு பிறகு பைப் லைன் போடுவதற்காக என பாதையை ஒப்படைத்ததாக ஒரு ஆவணத்தை உருவாக்கிவிட்டோம் என்றால், சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளுக்கு நாங்கள் பணம் கொடுத்து விட்டோம் எனவும் அதனால் வா சா ஆ 1 ஒப்பந்தத்தில் இருந்து அவர்களை விலக்கி விட்டோம் எனவும் சொல்லியிருக்கேிறன . எவ்வளவு தொகை எந்த தேதியில் ப ட்டுவாடா செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . வழக்கிலும் மேற்படி விபரம் சொல்லப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . 2, 3 பிரதிவாதிகள் பணம் வாங்கி கொண்டதாகவும் ஒப்பந்தத்தில் இருந்து விலகி விட்டதாகவும் எந்த எழுத்து பூர்வமான ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா சா ஆ 1 ஆவணத்தில் எந்த இடத்திலும் 1 மற்றும் 2, 3 பிரதிவாதிகளின் நிலத்தில் குழாய் பதிப்பதற்காக நிலம் கொடுக்கப்பட்டது என எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை என்றால சரியல்ல . அவர்கள் எங்களுக்கு எழுதி கொடுத்திருக்கிறார்கள். 1 ம் பிரதிவாதி நிலத்திற்கு அடுத்து 2, 3 பிரதிவாதிகளின் நிலம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . வா சா ஆ 1 ஆவணத்தில் ரவிச்சந்திரனுக்கும் முருகேசனும் எவ்வாறு கையெழுத்து போட்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தெரியும். பிரதிவாதிகள் 2 மற்றும் 3 இருவரையும் எதற்காக வழக்கில் சேர்த்தேன் என்ற விபரம் எனக்கு தெரியாது . 1 ம் பிரதிவாதி சொலைய கவுடரின் மகன் நடராஜனை எனக்கு தெரியும் ,. அந்த சொத்தில் நடராஜனுக்கு பாத்தியம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . நடராஜன் வாதிகள் மீது சொலைய கவுடரின் சொத்துக்களை பொறுத்து எந்த வில்லங்கமும் செய்யக்கூடாது சொத்துக்குள் அத்து மீறி நுழையக்கூடாது என்று அசல் வழக்கு எண். 188/2012 என்ற

வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . (வாதி தரப்பு ஆட்சேபணை உடன் பதிவு செய்யப்பட்டது ) வா சா ஆ 1 ஒப்பந்தம் 2, 3 பிரதிவாதிகளால் 1ம் பிரதிவாதியை ஏமாற்றி பெறப்பட்டது என்றால் சரியல்ல . ஜெயராஜ் என்ற 1ம் பிரதிவாதி மாமா மகன் ஏற்பாடு செய்து 1ம் பிரதிவாதியின் வீட்டில் தான் கையெழுத்து போடப்பட்டது . ஆவணம் டைப் செய்யப்பட்டது மேட்டுப்பாளையம் பஜனை கோவில் வீதியில் ஆவணம் டைப் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் வெள்ளிங்கிரி டைப் ஆபிசில் டைப் செய்யப்பட்டது . எந்த வீதி என்று எனக்கு தெரியவில்லை. வா சா ஆ 1 ஆவணத்தில் ஜெயராஜ் ஒரு சாட்சியாக இல்லை என்றால் சரிதான். நாங்கள் ஒப்பந்தம் ஏற்படுத்திய அன்று அவர் வரவில்லை . எழுதிய அன்று இருந்தார். ஜெயராஜ் தான் எழுதினார். சொலவைய கவுடரிடம் முறையாக அவருடைய சம்மதத்தின்பேரில் ஆவணத்தில் கையெழுத்து பெறப்படாததால் தான் நான் ஆவணம் ஏற்பட்ட விதம் குறித்து முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் அட்வான்ஸ் தொகையை திருப்பி கேட்டு பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். வா சா ஆ 1 ல் கண்ட மூன்று மாத கால கட்டத்திற்குள் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை எ ன்றால் நாங்கள் கிரையம் செய்து கொள்ள தயாராக இருந்தோம். அந்த மூன்று மாத கால கெடுவிற்குள் கிரையம் செய்ய ஒப்பந்தம் போடப்பட்டதாகவும் கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என அறிவிப்பு எதாவது அனுப்பினோமா என்றால் இல்லை . வருவாய் துறையினர் அனுமதி இல்லாமல் கிணறு வெட்டவோ வருவாய் நிலங்களில் 4. கி. மீட்டர் அள விற்கு பைப் லைன் போடுவதோ இயலாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஒரு சட்ட விரோதமான செயலுக்கு ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்த இயலாது என்றாலும் அவ்வாறு ஏற்படுத்தினாலும் அந்த ஒப்பந்தம் செல்லாநிலையது என்றாலும் சரியல்ல. நாங்கள் சாலை வழியாகவும் குழாய் பதித்துள்ளோம் என்றாலும் வழக்கிற்காகதற்போது அவ்வாறு குழாய் பதிக்கவில்லைஎன்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சாலைகளின் நடுவே குறுக்காக குழாய் பதித்திருக்கிறோம். அவ்வாறு சாலைகள் வழியாக குழாய் பதிப்பதற்கு **Track Rent** கட்ட வேண்டும் என்றால் அவ்வாறு கட்டி தான் குழாய் பதித்திருக்கிறோம். அவ்வாறு நான் எதுவும் கட்டவில்லை என்றாலும் அனுமதி எதும் வாங்கவில்லை என்றாலும் சரிதான். வரி கட்டி அனுமதி பெற்று தான்

குழாய் பதித்திருக்கிறோம். சட்ட விரோதமாக வெள்ளியங்காடு ஓடையில் இருந்து தண்ணீரை திருடுவதற்காக இந்த ஒப்பந்தம் ஏற்பட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றாலும் அதனால் அந்த வா சா ஆ 1 ஒப்பந்தத்தில் கண்ட சரத்து விபரங்கள் சட்ட விரோதமானவை என்றாலும் சரிய ல்ல . பைப் லைன் போடுவதற்கோ கிணறு வெட்டுவதற்கோ எந்த நிலமும் கொடுக்கப்படவில்லை என்றாலும் அதற்காக வா சா ஆ 1 கிரைய ஒப்பந்தமும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல . எங்களுக்கு கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என்ற எந்த எண்ணமும் 1 ம் பிரதிவாதிக்கு கிடையாது என்றாலும் அவர் எங்களுடன் கிரைய ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்தி கொள்ளவில்லை என்றாலும் எவ்வித சுவாதீனமும் கொடுக்கப்படவிலலை என்றாலும் சரியல்ல. சுவாதீனம் கொடுத்ததால் தான் அங்கே போனோம் . காரமடை காவல் நிலையத்தில் ஒரு விசாரணை நடந்தது என்றால், விசாரணை நடந்தது. எங்களுக்குள் பைப் லைன் போடக்கூடாது என தகராறு ஏற்பட்டதால் விசாரணை செய்யப்பட்டது என்றால் அவர்கள் குழாய்களை உடைத்து தென்னை மரங்களை நட்டு வைத்தார்கள் . அந்த சமயத்தில் நாங்கள் கேட்டை உடைத்து பைப் லைனை சரி செய்ய போனதால்குற்றவிய ல் வழக்கு ஏற்பட்டது என்றால் சரியல்ல. சொலவைய கவுடர் 2, 3 பிரதிவாதிகளுக்கு பைப் லைன் போட அனுமதி கொடுத்திருந்தார் என்றாலும், நாங்கள் 2, 3 பிரதிவாதிகளுடன் கூட்டு சதி செய்து பைப் லைனை நீட்டிக்க செய்து கொண்டோம் என்றாலும் அதனால் தான் பிரச்சினை ஏற்பட்டது என்றாலும் சரியல்ல .. எல்லோருக்கும் ஒரே பைப் லைன் தான் போட்டது . 2, 3 பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்ட பைப் லைனை சட்ட விரோதமாக நீட்டிக்க 24 வாதிகளும் முய ற்சி செய்ததால் தான் 1 ம் பிரதிவாதி அதை தடுத்தார் என்றால் சரிய ல்ல. தாவா சரியான மதிப்பீட்டில் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் , நாங்கள் செலுத்திஉள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. அதேபோல் நாங்கள் வா சா ஆ 1 ல் கண்ட கால கெடுவிற்குள் கிரையம் செய்து கொள்ள தயாராக இருந்ததில்லை என்றாலும் அதிலுள்ள சரத்துக்கள் பொய்யான வை என்பதால் தான் நாங்கள் அவ்வாறு தயாராக இருக்கவில்லை என்றாலும் சரியல்ல . உண்மையாகவே அந்த ஆவணத்தில் கண்டபடி முன் பணம் எதாவது கொடுத்திருந்தால் அதனை திரும்ப கேட்டிருப்போம் என்றாலும் அவ்வாறு பணம் ஏதும்கொடுக்காததால் தான் பணத்தை திருப்பி கேட்கவில்லை என்றால் சரியல்ல. வெள்ளிங்கிரி டைப் ஆபிசில் ஐந்து லட்சம்

கொடுத்தோம். வெள்ளிங்கிரி டைப் ஆபிசிற்கு 1ம் பிரதிவாதி சொலவைய கவுடர் வரவேயி ல்லை என்றாலும் எங்களிடம் எந்த பணமும் வாங்கவில்லை எனறாலும் சரியல்ல. அவரும் அந்த அம்மாவும் வந்தார்கள் . கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்படவேண்டும் என்ற விபரம் தெரிந்திருந்தும் அந்த ஆவணம் கண்ட தேதியில் அந்த ஆவணம் ஏற்படுத்தப்படாதததால் தான் அதனை பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல . அவர்கள் தான் ஆவணங்கள் கொண்டு வருவதாக காலம் கடத்தியதால் பதிவு செய்ய முடியவில்லை . அவ்வாறு ஆவணங்கள் கொண்டு வராததால் தான் பதிவு செய்யப்படவில்லை என்று என்னுடைய வழக்கிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை. ஆவணம் கொண்டு வராததால் தான் வா சா ஆ 1 ஒப்பந்தத்தை பதிவு செய்ய முடியவில்லை என்று வழக்கிற்காக பின் யோசனையிட்டு கூறுகிறேன் என்றால் சரியல்ல . எப்பொழுதும் பணத்தை வைத்து கொண்டு தயாரா இருந்தோம் . எந்த மாதிரியான ஆவணங்களை கொண்டு வருவதற்காக காத்திருந்தோம் என்று என்னுடைய வழக்கிலும் பிரமாணத்திலும் சொல்லியிருக்கிறோமா என்றால் கிரையத்திற்கான ஆவணங்களுக்காக காத்திருந்தோம். என்ன என்ன ஆவணங்கள் என்று என்னால் குறிப்பாக சொல்ல முடியாது என்றால் மூல பத்திரம் கொடுப்பதற்காக காத்திருந்தோம் . வா சா ஆ 1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லும் சமயத்தில் மூல பத்திரங்களை பார்க்கவில்லையா என்றால் நான் பார்க்கவில்லை. ஆண்கள் பார்த்திருந்தார்கள். ஒப்பந்தமே முறையாக கையெழுத்து பெறப்பட்ட ஆவணம் அல்ல என்றாலும் முறைகேடாக கையெழுத்து பெறப்பட்ட ஆவணம் என்றாலும் அதனால் தான் என்னால் விபரங்களை சரியாக சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல . அதனால் தான் மூல பத்திரங்களை கேட்டும் கிரையம் செய்து தரக்கோரியும் அந்த 3 மாத கால கட்டத்திற் குள் எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல . எங்களுக்கு எந்த சந்தேகம் வராததால் அறிவிப்பு அனுப்பவில்லை. கிரையமே செய்து கொள்ளலாம் என்றிருந்தோம் . வா சா ஆ 1 ஏற்பட்டதாக சொல்லும் தேதிக்கு முன்னிட்டு தாவா சொத்தை பொறுத்து வில்லங்க சான்று எடுத்து பார்த்தோமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது . இந்த ஒப்பந்தம் போலியானது என்பதால் தான் கிரையம் செய்து கொள்ள விருப்பத்துடனும் தயாராகவும் இருந்தோம் என்ற சங்கதியை எங்களால் நிரூபிக்க இயலவில்லை என்றால் சரியல்ல,.

**தாவா காலவரையறையினால் பாதிக்கப்பட்டுள்ளதால் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.**

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

**Sd/-S.Indulatha**

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.

**SUB COURT, METTUPALAYAM**